தமிழ்



2018

மார்க்கம் தைப்பொங்கல் விழா மலர்
Markham Thaipongal Vizha Malar

தமிழ்

2018

மார்க்கம் தைப்பொங்கல் விழா மலர்
Markham Thaippongal Vizha Malar

PROCLAMATION

The Mayor and Members of Council
For
The Town of Markham

hereby

Proclaim

January 13, 14 and 15, 2012

Tamil Heritage Days/Thai Pongal
(Tamil New Year)

Frank Scarpitti
Mayor

MARKHAM



Mayor Frank Scarpitti & Members of Markham Council

wish you a

HAPPY PONGAL



January 14, 2018

MESSAGE FROM MAYOR SCARPITTI

On behalf of Members of Council and the City of Markham, I am pleased to extend our best wishes to all those attending the 7th Annual Thai Pongal Vizha / Markham Tamil Heritage Celebrations hosted by the Centre for Tamil Heritage and Culture.

The City of Markham is proud to be recognized as Canada's most diverse community. Markham is the first municipality in Canada to officially recognize Thai Pongal Celebrations and the first city to proclaim January Tamil Heritage Month in Ontario. We recognize and appreciate the significant contributions that Tamil Canadians continue to make to the cultural and economic vibrancy in our community.

This annual harvest festival is a special time to give thanks to nature and to celebrate peace, prosperity, happiness and harmony. The harvest is considered to be the most important festivals celebrated by the Tamil people. I want to extend a special thanks to the presenting sponsor FLATO Developments along with all other sponsors who make this event possible.

Best wishes to everyone for a wonderful celebration and to all the volunteers who have dedicated their time and effort in making this event possible. Have a safe and happy 2018.

Sincerely,

Frank Scarpitti
Mayor



CENTRE FOR TAMIL HERITAGE AND CULTURE



Logan Kanapathi

January 14, 2018

GREETINGS FROM THE CHAIR

On behalf of the Markham Thai Pongal Vizha Committee and the Centre for Tamil Heritage and Culture, I am delighted to welcome you to the 7th Annual Thai Pongal Vizha!

Thai Pongal has been celebrated for over 2,200 years by Tamils worldwide including India and Sri Lanka. Pongal is a non-religious festival celebrated over four days to honour and express gratitude towards Nature, including agricultural livestock. It is a time of thanksgiving and also observed as the Tamil New Year. It is currently celebrated by over 74 million worldwide and over 300,000 Tamils in Canada, predominately in the Greater Toronto Area.

Last year was a milestone celebration for us because of the Chief Minister of the Northern Province of Sri Lanka's historical visit, the first of its kind in Canada, to sign the Friendship Agreement between the City of Markham and the Northern Province of Sri Lanka. I was delighted to see Tamils from the Greater Toronto Area travel to Markham to be part of this momentous occasion. It showed the true spirit of Tamil-Canadians.

Markham was the first City in Canada to officially proclaim Tamil Heritage Days. Thank you to the Mayor & Council at the City of Markham for embracing Tamil culture, heritage and language to another level.

I would like to thank each and every member of the committee, community organizations, our sponsors, volunteers, media and performers; who have played a significant role in organizing a celebration of this magnitude.

Sincerely,

Logan Kanapathi
Councillor, City of Markham

2018 Award Recipient
Mayor Frank Scarpitti
City of Markham

In 2012, Markham became the first municipality in Canada to officially recognize Thai Pongal Celebrations and the first city to proclaim January Tamil Heritage Month in Ontario; a way to celebrate the richness of the Tamil culture, while reflecting on the significant contributions of Tamil-Canadians.

Mayor Scarpitti is a champion of human rights and supported the call on the Federal Government to investigate the Genocide in Sri Lanka. Mayor Scarpitti also supported a joint program with the York Region District School Board which gave children from the local Tamil community a chance to go to summer camp; injecting some positive activity at a time of great turmoil during the civil way in Sri Lanka.

The City of Markham signed an historic friendship agreement with Mullaitivu in the Northern Province of Sri Lanka. Mayor Scarpitti also played an instrumental role in the naming of Vanni Street, known as one of the most fertile regions in Sri Lanka. He also spent some time in Tamil Nadu during a business mission to India.

The City of Markham is Canada's most ethnically diverse city, there are more than 30,000 residents of Tamil heritage in Markham. The community plays a strong and vital role in the City's growth and prosperity.

உள்ளடக்கம்



Centre for Tamil Heritage and Culture

தமிழ் மரபியல் பண்பாட்டு மையம்

கவுன்சிலர் லோகன் கணபதி அவர்கள் வழங்கிய தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துச் செய்தி



உலகெங்கும் பரந்து வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் என் உள்ளம் நிறைந்த புத்தாண்டு, தைப்பொங்கல் வாழ்த்துகளைப் பெருமகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டும் பல வழிகளிலும் எம்மை மேம்படுத்தியே விடைபெற்றுச் செல்லுகின்றது. இனிய நினைவுகளையும் நிகழ்வுகளை உள்ளடக்கிய 2017ம் ஆண்டு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றிருக்கின்றது. மீண்டும் எமக்கான புதிய அனுபவங்களையும் அறிவூட்டல்களையும் தரவல்லதாகப் புதிய ஆண்டான 2018 பிறந்திருக்கின்றது.

நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு புதிய ஆண்டும் எமக்கான வெகுமானங்களைச் சுமந்து வருவதில்லை. காலங்கள் தோறும் எம்மை வலிமைப்படுத்திக் கொண்டிருக்கம் நாம், அறிவார்ந்த செயற்பாடுகளாலும் தளராத உறுதிமிக்க நடத்தைகளினாலும் சவால்களை எதிர்கொண்டு வெற்றிக் கனிகளைப் பறிக்கின்றோம்.

தடைகளைக் தகர்த்து புதிய பாதைகளை உருவாக்குவதிலும் மேம்மேலும் வளர்ச்சியின் படிநிலைகளை எட்டுவதிலும் நாம் சலிப்படைந்துவிடக் கூடாது. காலம் சில வாய்ப்புகளை எமக்குத் தரும். ஆனால் அதைச் செம்மையாகப் பயன்படுத்தி வெற்றி காண்பது எமது கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

கனடாவில் மட்டுமல்ல, தமிழர் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தேசம் எங்கும் பெருவளர்ச்சி பெற்று வருகின்றார்கள். கல்வியிலும் பொருளாதாரத்திலும் அவர்கள் பெற்றுவரும் மேம்பாடு பலரையும் வியக்க வைக்கின்றது. தமிழருடைய இந்த பெருவளர்ச்சி இனத்தின் வளர்ச்சியாக நோக்கப்படுமளவுக்கு இனவொருமைப்பாட்டுடன் நாம் வாழ வேண்டியது அவசியமாகும்.

குடியேறிய நாடுகளில் நாம் ஓரினமாக ஒருங்கிணைந்து இறுக்கமாக வாழும்போதுதான் தாயக மக்களும் மேன்மையடைவர். தாயக மக்களோடு உறவுகளைப் பேணிக்கொள்வதில் நாம் போதிய அக்கறை கொள்ள வேண்டும். எமது இளைய தலைமுறையினருக்கும் தாயக மக்களுக்குமிடையே நாம் நெருக்கமான உறவை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

மார்க்கம் மாநகரசபை வடமாகாணத்துடன் கொண்டிருக்கும் உடன்பாடு கூட இந்த உறவுகளை வலிமைப்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே. ஆண்டுதோறும் மார்க்கம் மாநகரசபை உறுப்பினராக நான் பல பணிகளைச் செய்துவருகின்றேன். நான் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்லின மக்கள் சமூகத்துக்கும் நான் சார்ந்த சமூகத்துக்கும் என் அதியுச்ச சேவைகளைச் செய்து வருகின்றேன். தொடர்ந்தும் நான் வலிமையோடும் உவப்போடும் என் பணிகளைச் செய்வதற்கு வழக்கம் போன்று நீங்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்பான மக்களே!

இடர்களை எதிர்கொண்டு பெறுகின்ற வெற்றிதான் அழகும் நிறைவும் கொண்ட மகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே தளராத உறுதியுடன் எதுவரினும் எதிர்கொண்டு மேலும் முன்னேறிச் செல்வோம்.

மீண்டும் உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள்.
நன்றி!

லோகன் கணபதி
மாநகரசபை உறுப்பினர்
மார்க்கம் மாநகரசபை.



தமிழ் மொழியின் தொன்மை

பேராசிரியர் முனைவர் **அ. சண்முகதாஸ்**
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை.

நமக்குக் கிடைத்துள்ள சங்கப் பாடல்களே நம்முடைய தமிழ் மொழியின் பண்டைய இலக்கியங்களாகும். தமிழ்நாட்டில் தேனி மாட்டத்தில் ஆண்டிப்பட்டித் தாலுகாவிலுள்ள புலிமான் கோம்பை என்னும் இடத்தில் 2006ஆம் ஆண்டு பங்குனி 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் மூன்று வீரக்கற்கள் (நடுகற்கள்) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல் பொருளியல் துறை சார்ந்த அறிஞர் பேராசிரியர் கே. இராஜன் மற்றும் வி. பி. யதீஸ்குமார், எஸ். செல்வகுமார் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மூவரும் இக்கற்களின் வரலாற்றுச்சிறப்பினைப் பற்றி International Journal of Dravidian Linguistics (Vol.XXXVI, No.1, January 2007) என்னும் ஆய்விதழில் “The Earliest Hero Stones of India” என்னும் கட்டுரையினை எழுதினர். இவ்வீரக்கற்களிலே எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் வரலாற்று முதன்மையுடையன. சங்கப் பாடல்களின் காலத்தினை ஐயமின்றிக் கூறுதற்கு சான்றாகின்றன. முதலாவது வீரக்கல்லில் “கல் பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்” எனக் கூறும் மூன்று வரிகள் காணப்படுகின்றன. கூடலூரில் நடைபெற்ற ஆகோள் போரில் மடிந்த தீயவன் மகனாகிய அந்தவன் என்னும் வீரனுக்கு இக்கல் நடப்பட்டது என்பதை இக்கல்வெட்டுக் கூறுகின்றது. கல்வெட்டில் குறிப்பிட்ட ‘ஆகோள்’ பற்றியும் அப்போரில் பங்குபற்றி வீரமரணம் அடைந்த வீரன் பற்றியும், அவ்வீரனின் பெயர் பொறித்த வீரக்கல் பற்றியும் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. புறநானூறு 259 தொடக்கம் 265 வரையான பாடல்கள் ஆகோள் பற்றிக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, உறையூர் இளம்பொன் வாணிகனார் பாடிய 264ஆம் பாடலைப் பார்க்கலாம்:

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்திமரல்வகுத்து
தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
இனிநட்டனரே கல்லும் கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே?

பகைவர் பிடித்துச் சென்ற ஆநிரையினை மீட்பதற்காகச் சென்ற அந்த வீரன் கன்றுகளையும் கறவைகளையும் மீட்டுத் தந்து பகைவரையும் புறங்காட்டி ஓடச்செய்த வேளையில் களத்திலே வீழந்துவிட்டான். புலிமான்கோம்பைக் கல்வெட்டில் கூறப்பட்ட கூடல் ஊர் ஆகோளில் பட்ட தீயன் அந்தவன்போல், அவ்வீரனும் களத்திலே பட்டான். அந்தவனுக்கு நட்ட கல் போல் அவ்வீரனுக்கும் சிவந்த பூங்கண்ணியும் மயிற்பீலியும் சூட்டி, கல் வெட்டிலே அந்தவன் பெயர் பொறிக்கப்பட்டது போல், அவ்வீரனுடைய பெயரும் பொறித்துக் கல் நட்டனர். புறம். 260ஆம் பாடலில் வடமோதங்கிழார் “ஆநிரை மீட்கச் சென்ற வீரன் அந்நிரையை மீட்டுத் தன்னுயிர் நீத்தான். அவ்வீரனுடைய உடல் ஆற்றோரத்திலே அம்புபட்டு ஒழிந்தது. அவனது புகழ் நிறைந்த பெயரோ மயிலிறகு சூட்டப்பட்டுப் பந்தலின் கீழே அமைக்கப்பட்ட வீரக்கல்லிலே இருக்கின்றது” என்று கூறுகின்றார். புலிமான் கோம்பைக் கல்வெட்டுள்ள வீரக்கற்கள் வைகை ஆற்றின் தென்கரையில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆற்றங்கரையிலே கல் நாட்டப்படும் வழக்கினை இப்பாடலும் உறுதிசெய்கின்றது.

மேலே காட்டப்பட்ட பாடல்கள் குறிக்கும் ஒரு மரபினையே புலிமான்கோம்பைக் கல்வெட்டும் அது காணப்படும் வீரக்கல்லும் உணர்த்துகின்றன.

மேலும் பல சங்கப் பாடற்சான்றுகளை (அகநானூறு: செய்யுட்கள்: 53, 269, 297, 343, 352, 365, 387) பேராசிரியர் இராஜன் முதலியோர் தங்களுடைய கட்டுரையிலே தந்துள்ளனர். புலிமான்கோம்பைக் கல்வெட்டு கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கட்டுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். சங்கப் பாடல்கள் 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டன என்பதற்கு இக்கல்வெட்டு சான்றாகின்றது. புலிமான்கோம்பையில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய இரு வீரக்கற்களும் அவற்றில் காணப்படும் கல்வெட்டுகளும் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டன எனக் கட்டுரை ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

பொருந்தல் என்னுமிடத்தே நடைபெற்ற தொல்லியலாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொடுகுழிகளுள் மாதிரி ஒன்றில் உள்ள நெல் கி.மு. 490ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதனுடன் காணப்பட்ட எழுத்து தமிழ்-பிராமி என அடையாளம் காணப்பட்டது. இரண்டாவது மாதிரியிலும் இதே நிலை காணப்படுவதால் கி.மு. 5ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்-பிராமி எழுத்து காணப்பட்டது என இந்த ஆய்விலே ஈடுபட்ட பேராசிரியர் இராஜன் முதலியோர் கூறுகின்றனர். இதுவரை காலமும் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்-பிராமி பயன்பட்டது என நம்பிவந்தோம். இத்தொல்லியல் கண்டுபிடிப்பால் தமிழ் மொழி கி.மு. 5ஆம் நூற்றாண்டிலேயே எழுத்து வடிவத்தினைப் பெற்றுள்ளது என நம்பக்கூடியதாயுள்ளது.

சங்க இலக்கியங்கள் என நாம் இன்றுகொள்பவை மூன்றாவது சங்க காலத்தைச் சேரந்தன எனவும் இவற்றுக்கு முன்னர் இரண்டு சங்கங்கள் இருந்தன எனவும் பல இலக்கியங்கள் தோன்றின எனவும் இறையனார் களவியலுரை கூறுகின்றது. களவியலுரை சங்கம் பற்றிக் கூறியதைச் சுருக்கமாகப் பின்வரும் அட்டவணை கூறுகின்றது:

தலைச் சங்கம்	
புலவர்கள்	அகத்தியனார், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் உட்பட்ட 449 பேர். எல்லாமாக 4449.
நூல்கள்	பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை.
மன்னர்	காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரையான 89 பேர். 7 பேர் புலவர்
இடம்	மதுரை
இலக்கணம்	அகத்தியம்
காலம்	4410
இடைச் சங்கம்	
புலவர்கள்	அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், கீரந்தை, துவரைக்கோமான் உள்ளிட்ட 59 பேர். எல்லாமாக 3700.
நூல்கள்	கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல்
மன்னர்	வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை 59 பேர். 5 பேர் புலவர்.
இடம்	கபாடபுரம்
இலக்கணம்	அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம்.
காலம்	3700 ஆண்டு
கடைச் சங்கம்	
புலவர்கள்	சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர் கிழார், இளந்திருமாறன், மதுரைஆசிரியர் நல்லந்துவனார், மதுரைமருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என 49 பேர். எல்லாமாக 449.
நூல்கள்	நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும்.
மன்னர்	கடல்கொள்ளப்பட்டு போந்திருந்த முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை 49 பேர். 3 பேர் புலவர்
இடம்	உத்தர மதுரை
காலம்	1850 ஆண்டு

சங்கம் பற்றி மேற்காட்டப்பட்டவை "சில உண்மைகள் பெரும் கற்பனையுடன் கலந்துள்ளன" என வரலாற்றாசிரியர் கே. ஏ. நீலகண்டசாஸ்திரி கூறுவார். அது முழுவதும் கற்பனையே என்று கே. என். சிவராஜபிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை போன்றோர் கருதினர். ஆனால் இன்று இறையனார் களவியலுரைகாரரின் கருத்து வெறுமனே கற்பனை என்று ஒதுக்கப்படுவதில்லை. பேராசிரியர் க. கைலாசபதி "சிவராஜபிள்ளையைப் பின் பற்றி இக்கருத்து முற்றுமுழுதாக வரலாற்று மதிப்பு எதுவும் இல்லாத கற்பனையே என்று கூறும் அறிஞர்களுடன் இணங்குதல் முடியாததொன்றாகும்" எனக் கூறியுள்ளார். கே. கே. பிள்ளை போன்ற வரலாற்றாசிரியர்கள் இக்கருத்துக்கு ஆதாரமான சிலசான்றுகளுண்டெனக் கூறியிருப்பதை எடுத்துக்காட்டும் கைலாசபதி,

> "முற்காலப் பாணரும் சான்றோரும் பண்டைக்காலக் கல்வி, மரபுப்புகழ், வேறு பண்டைக் காலச் செய்திகள் ஆகியனவற்றைப் பேணுபவர்களாகவும் மேம்படுத்துபவர் களாகவும் இருந்தனர். இந்த வகையில் நோக்குமிடத்து இக்கதை பண்டைய இலக்கிய ஆக்கங்களை உரிய இடத்தில் வைப்பதற்காகவே என்பது பெறப்படும்"

எனக் கூறுகின்றார்.

ஒரு தொடர்ச்சியான தமிழ் இலக் கியப் பாரம்பரியம் இருந்ததையே இக்கதை கூறுகின்றது என்பதை உணரக் கூடியதாயுள்ளது. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் இக் கருத்தினையே தம்முடைய தமிழிலக்கிய வரலாற்றிலே குறிப்பிடுகிறார், "புகழ்மிக்க இலக்கிய பழைமைக்காலம் பற்றிய தொன்மக்கதைகள் இடையீடில்லா இலக்கிய வரலாறு பற்றிய இனநினைவின் சின்னமாக அமைகின்றன." என்று கூறும் தெ. பொ. மீ. சங்கம் பற்றிய மரபு தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஓர் இலட்சிய இலக்கியக் கழகம் பற்றியதாக அமையலாம் என்று கூறுகின்றார். ஆனால் தமிழண்ணல் போன்றோர் எவ்வித மயக்கு எண்ணமில்லா தவர்களாகக் களவியலுரையை நோக்குகின்றனர்.

> "முதற் சங்க காலத்திலிருந்து தோன்றிய கலைச் செல்வ நூல்கள், அறிவியல் ஆக்கங்கள் யாவும் மறைந்து போயின. கடல்கோள்களால் போயின பல; இறையனார் அகப்பொருளுரை முதற்சங்க நூல்களாக பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, அகத்தியம் ஆகிய வற்றைக் குறிப்பிடுகிறது;; சிலப்பதிகார உரையில் அடியார்க்குநல்லார் முதற்சங்க நூல்களாக, இறையனார் அகப் பொருளுரை குறிப்பிட்டவற்றையே தாமும் குறிப்பிடுகிறார்."

என்று தமிழண்ணல் கூறுமிடத்து இறையனார் களவியலுரைக்கதை வெறும்கற்பனையல்ல என்னும் உணர்வுடனேயே கூறுகிறார். பேராசிரியர் கா. சிவத்தம்பி "இறையனார் களவியலுரையிலே தரப்பட்டுள்ள சங்கம் பற்றிய கட்டுக் கதை" என்று கூறுகின்றார். தெ. பொ. மீ., தமிழண்ணல், கைலாசபதி போன்றவர்கள் இதனைக் கட்டுக்கதையாகக் கொள்ளவில்லை. இன்று நமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியங்களுக்கு முன்னரும் ஒரு பெரிய தமிழிலக்கியப் பாரம்பரியம் இருந்திருக்கின்றது என்னும் எண்ணத்தினை நமக்கு வழங்கியது களவியலுரைக் கதையேயாகும்.

மேற் கூறியவற்றை நோக்குமிடத்து, தமிழ் மொழி சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கிய வளமுள்ள மொழியாக இருந்திருக்கவேண்டும். கடல்கோள்களாலும் பிற காரணிகளாலும் பண்டைய இலக்கியங்களும் தமிழ்க் கழகங்களும் அழிவுற்றிருக்கவேண்டும்.



மதுரைக்கு அருகேயுள்ள சின்ன உடைப்பு கண்மாய் அருகிலான தாடவைத்தான் காடு - கல்வட்டம்



தனித்துவம் பேணுமா புதிய தலைமுறைகள்?

பொன்னையா விவேகானந்தன்

வேகமாக ஓடிக்கொண்டும் மாறிக்கொண்டுமிருக்கும் இக்காலச் சூழலில் தலைமுறை இடைவெளி பூதாகரச் சிக்கலாக உருவெடுத்துள்ளது.

தாய் தந்தையரைப் பார்த்தோ அல்லது தாத்தா பாட்டியரைப் பார்த்தோ "உங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறுவது எல்லா வீடுகளிலும் வழக்கமாகிவிட்டது. இதற்குத் தலைமுறை இடைவெளியே காரணம் எனப் பலரும் கூறுவர். கனடா போன்ற பன்முகப் பண்பாட்டுத்தளத்தில் இத்தலை முறை இடைவெளி தவிர்க்க முடியாதது. இயல்பானது.

தீர்வு காணப்படாத இந்தத் தலைமுறை இடைவெளியே பெரும் வரலாற்றுத் தவறுக்கு இட மளிக்கப் போகின்றது என்பதை நம்மில் பலரும் தெரிந்துகொள்ளவில்லை.

இந்தத் தலைமுறை இடைவெளி என்ற பெரும் சவாலை முறியடிக்கும் வல்லமை எமக்கு இருந்த தெனினும் நாம் அதைச் செய்யத் தவறியிருக்கின் றோம். பொருளாதார இருப்பைப் தக்கவைக்க வெறி கொண்டு போராடிய நாம் எமது அடுத்த தலைமுறையினருடனான நெருக்கத்தைப் பேணத் தவறியிருக்கின்றோம்.

இதனுடைய விளைவுகள் பாரதூரமானவை என்பதை எமது இன்னமும் புரிந்துகொள்ளாமல் இருப்பதே இன்றைய அவல நிலைகளில் முதன் மையானது. அடுத்து வரும் ஐம்பது நூறு ஆண்டு களுக்குள் கனடாவில் வாழும் எம்மினத்தின் பெரும்பான்மையை வெகு எளிதாகத் தொலைத்துவிட நாமே காரணமாக இருக்கின்றோம் என்பதை உணராதிருக்கின்றோம்.

இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள் கனடா வில் மட்டுமல்ல, தமிழர் புலம்பெயர்ந்திருக்கும் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் தமிழர்கள் தொழில்துறைகளில் மிக உயர்ந்த நிலைக்குச் செல்வார்கள். உலக அரசியலிலும் உயர்ந்த இடத்தில் இருப்பார்கள். இவ்வாறானோர் இனத் தைத் தொலைத்தவர்களாக இருந்தால், தமிழர் என்ற அடையாளத்தை இழந்திருந்தால் அவர்களுடைய ஆற்றல்களும் அதிகாரங்களும் தமிழ் சமூகத்துக்கோ, தாயகத்துக்கோ சிறிதும் பயன் படாது. சமூகமான இணைந்திருக்கும் ஆற்றல் மிக்க தனிமனிதச் செயற்பாடுகளே சமூகப் பெறுமா னத்தை உயர்த்துகின்றன. இவ்வாறான நிலை சமூகம் சார்ந்த இருப்புக்கு மிக ஆபத்தானது.

தமிழனம் தனிமனித ஆற்றலும் வளர்ச்சியும் சமூகத்துக்குப் பயன்பட வேண்டும். இனத்தை விட்டு விலகிச் செல்பவர்களால் இனம் அழிக்கப் படுமே தவிர, வேறு எதுவும் நிகழாது.

யூதர் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தமது வளர்ச்சியையும் ஆற்றல்களையும் இனஞ் சார்ந்தே அடையாளப்படுத்தினர். தமது செல்வங் களை இனஞ்சார்ந்தே பத்திரப்படுத்தினர். அதனா ல்தான் புலம்பெயர்ந்த இரண்டாயிரம் ஆண்டுக ளின் பின் அவர்களால் ஒரு நாட்டை உருவாக்க முடிந்தது.

புலம்பெயர்ந்து வாழும் நாம் அடுத்த தலை முறையைத் தமிழர்களாக வாழச்செய்வதைப் போன்ற சிறந்த செயல் வேறெதுவும் இருக்க முடியாது. அதைச் செய்யத் தவறினால் அதைவிட வரலாற்றுத் தவறும் வேறெதுவும் இல்லை.

இனவடையாத்தை தொலைத்துவிட்டு வாழ் வைத் தொடரும் தலைமுறைகளினால் ஏற்படும் இனஞ்சார்ந்த துயரங்கள் பலவற்றை நாம் இப்போது எதிர் கூறினாலும் இன்னும் பல இழப்புகள் கற்பனைக்கு எட்டாதவையாகவும் இருக்கக் கூடும்.

தொடக்கத்தில் குறிப்பிட்ட எமது சாதனைகள் இனஞ் சார்ந்தவையாக கணிக்கப்படாது போகும். தமிழரை நம்பியிருக்கும் வணிக நிறுவனங்கள் வணிகத்தில் வீழ்ச்சியைச் சந்திக்கும். தமிழர் என்ற இனஞ் சார்ந்த வாக்கு வங்கி இல்லாமல் போகும். தமிழர் இனம் என்ற எல்லைக்கு அப்பால் கணி சமானோர் வெறும் கனடியர்களாக வாழ்வார்கள்.

அடுத்த தலைமுறையை இனம் சார்ந்து பேணுவது எப்படி? என்பது குறித்து பல விடயங்களை நான் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளேன். இதற்கான முயற்சிகள் தனி ஒருவராக இல்லாமல் குழுநிலையில் தீர்க்கமாக முன்னெ-டுக்கப்பட வேண்டும்.

இந்த முயற்சிகளை அரச அங்கீகாரத்துடன் மேற்கொள் வதற்குக் கனடா வாழ் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரு வாய்ப்பு தைத் திங்கள் தோறும் கொண்டாடப்படும் தமிழர் மரபுரிமைத் திங்கள் என்ற எழுச்சியாகும்.

மரபுரிமைத் திங்கள் எனப்படும் இந்த நிகழ்வுகள் இரு முதன்மையான இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும் என தாய்வீடு இதழ் தன்னுடைய தலையங்கமொன்றில் குறிப்பிட்டிருந்தது. அதைச் சற்று விரிவாக இங்கு தருகி ன்றேன்.

- இன அடையாளங்கள் சார்ந்து இளைய தலை முறையினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- தமிழருடைய இனஞ் சார்ந்த சிறப்புகளை பிறவி-னத்தோருக்கு எடுத்துக் கூறி, தமிழ் இனத்ததோருடைய மொழி, பண்பாடு மீது ஒரு பெறுமானப் பார்வையை அவர்களுக்கு ஏற்படுத்துதல்.

கடந்த சில ஆண்டுகளாக கனடாவின் பல பாகங்க ளிலும் தமிழர் மரபுரிமைக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வந்த போதிலும் மேற்குறித்த இலக்குகளை பெரும்பாலான நிகழ்வுகள் கொண்டிருக்கவில்லை.

சில அமைப்புகள் தங்களுடைய இருப்பை வெளிப்ப டுத்துவதற்காகவும் அரசியல் செல்வாக்குகளை வலுப்படுத் துவதற்காகவுமே இந்த நிகழ்வுகளை நடத்தினர். கடந்த ஆண்டு இவ்வாறு நடத்தப்பட்ட நிகழ்வுகள் சிலவற்றில் இந்தி, தெலுங்குப் பாடல்களைக் கொண்ட ஆடல் நிகழ்ச் சிகள் நடைபெற்றன.

தமிழினம் மீது பற்றும் பெருமையும் ஏற்படவல்ல, எத்தனையோ வரலாற்றுச் செய்திகளையும் உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் நாம் கொண்டிருக்கின்றோம். எங்கிருந்தோ வந்து தமிழைக் கற்று, தமிழ்ப் பண்பாட்டில் திளைத்த ஆங்கிலப் பாதிரியாரான ஜி.யு. போப் என்பவர் தான் ஒரு ஆங்கிலேயராக இறக்க விரும்பவில்லை. ஒரு தமிழனாகவே இறக்க விரும்பினார். தான் இறந்தால் தன் கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன் இங்கு உறங்கு கின்றான்" என எழுதுங்கள் என்று கூறிச் சென்றுள்ளார்.

ஆங்கிலேயராகப் பிறந்த ஒருவரே தமிழராக வாழ விரும்பும் போது, தமிழராகப் பிறந்த நாம் பெரும் பெருமைக் குரியவர்கள் அல்லவா. இதை நாமும் உணர்ந்து பிறருக்கு உணர்த்த வேண்டாமா?

தைப்பொங்கல் என்ற தமிழர் பண்பாட்டை உலகுக்கு ணர்த்தும் பெருவிழாவை நாம் கொண்டாடுகின்ற தை திங்களில் மரபுரிமைகளைப் பேணும் நிகழ்வுகளை மட்டுமே முன்னெடுப்போம்.

தைப்பொங்கல் என்ற விழாவை முன்னிட்டே தை மாதத்தை நாம் மரபுரிமை மாதமாக அடையாளப்படுத்தி-னோம். அதற்கு வலுவாக காரணங்கள் இருக்கின்றன. தமிழர்கள் பல மதங்களைப் பினபற்றி வருகின்றனர். எனி லும் அனைத்துத் தமிழர்களும் தமிழர்களாக ஒன்றுகூடி மத அடையாளங்கள் இல்லாத, இனஞ்சார்ந்தும் தலையாய பண்பாடு சார்ந்தும் முன்னெடுக்கும் பெருவிழாவே பொங்கல்.

நன்றி கூறுதல், விருந்தோம்பல், பெரியோரைப் போற் றுதல், இயற்கையைப் பேணுதல், கலைகளைப் பேணுதல், கூடி வாழ்தல் என்ற பெரும்பாலான பண்பாட்டு மரபுகளைச் சுமந்து நிற்கும் உயர்ந்த தமிழர் விழா பொங்கல். ஒவ்வொரு புதிய தலைமுறையும் தமிழருடைய உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களை மனதில் இருத்திக்கொள்ள வாய்ப்பளிக்கும் விழா பொங்கல் விழா.

தைப்பொங்கலும் அதை முன்னிட்டு உருவாக்கப்பட்ட மரபுரிமைத் திங்களும் முற்றிலுமான இனவடையாளம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் உன்னதமான சமூக நிகழ்வுகளாக நடைபெற வேண்டுமே தவிர, வேறெந்த சுயநலப் பயனையும் கொண்டிருக்கக் கூடாது.

தமிழர் மரபுரிமை நிகழ்வுகளில் இளையோருக்கு வாய்ப்புகளை வழங்குவோம். எமது வரலாற்றுப் பெருமை-களை அவர்களுக்கு உணர்த்த வகை செய்வோம். அரசிய லார்களை விருந்தினர்களாக அழைப்போம். இந்த நிகழ்வு கள் வாயிலாக எமது பெருமைகளை அவர்களுக்கு உணர்த்துவோம். விருந்தினராகப் வரும் அரசியல்வாதி-களையே போற்றும் நிகழ்வுகளாக இல்லாமலலும் அவர்க ளோடு கூடிப் படமெடுப்பதையே முதன்மையாகக் கருதாத-வர்களாகவும் நாம் இருப்போம்.

சில ஆடல்களும் பாடல்களும் பொருத்தமற்ற உரைக-ளுமே மரபுரிமைத் திங்கள் நிகழ்வகளாகிவிடாது. நிகழ்ச்சி களை ஒப்புக்குச் செய்வதை விட செய்யாதிருப்பதே சிறந்தது.


இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் கனடாவில் அரை மில்லியன் தமிழ் சந்ததியினர் வாழ்வர். அவர்கள் தமிழர்களாக வாழ வேண்டுமா? இல்லையா? என்ற முடிவை எடுக்குத் பொறுப்பு இப்போது எங்கள் கைகளில் உள்ளது.





MARKHAM THAIPPONGAL

2017



ANTHEM











YOGA







2016 - 2017













[illegible]

2016
2017





[illegible]















MARKHAM-2017







கருணாவின்
ஓவியக் காட்சி









2017



கணினித்தமிழின் இன்றைய நிலை

வல்லிபுரம் சுகந்தன்

"முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்த" தொல்காப்பியர் காலத்திலேயே முத்தமிழாய் விளங்கிய தொன்மைத்தமிழாம் எம் கன்னித்தமிழ், இன்று நான்காம் தமிழாய்க் கணினித் தமிழையும் தன்னோடு இணைத்துக்கொண்டிருக் கிறது. இக்கணினித்தமிழின் இன்றைய நிலையை ப்பற்றியும் எவ்வெவ் வழிகளில் அது வளரவேண்டி யிருக்கின்றது என்பதுபற்றியும் சற்றுப் பார்க்கலாம்.

வையகம் எம் கைகளுக்குள் அடங்கிவிட்டிருக் கும் காலமிது. கணினிப் பயனர்களிலும் அதிக மாய்க் கைபேசிப் பயனர்களால் நிறைந்த உலகிது. கணினித்தமிழ் என்பது, தனியே கணினியுடன் தொடர்புடைய தமிழை மட்டுமன்றி கைபேசி முதலான அனைத்து இலத்திரனியல் சாதனங்க ளிலும் உபயோகிக்கப்படும் தமிழ்மொழியையே குறிக்கின்றது.

தமிழ் எழுத்துருக்கள்

கணினித்திரைகளில் (இலத்திரனியல் திரைக-ளில்) தமிழ்மொழி எழுத்துருக்களைப் (font) பயன்படுத்தத் தொடங்கியதைக் கணினித்தமிழின் தொடக்கமாகக் கொள்ளலாம். தொடக்ககாலங் களில் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு முகம்கொடுத் துவந்த கணினித் தமிழெழுத்துருக்கள், ஒருங்குறி எழுத்துவார்ப்பு (Unicode encoding) உருவாக் கப்பட்டதன் பின்னர், பெருமளவில் சீர்பெற்றன. இவ்வொருங்குறி எழுத்துவார்ப்பிலும் தமிழ்மொழி க்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் குறித்த பிரச்சினை கள் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன என்பது வேறுவிடயம். ஆயினும் இவ்வொருங்குறி எழுத் துவார்ப்பிற்கமைய தமிழெழுத்துருக்கள் உருவாக் கப்பட்ட பின்னர் இணையவுலகில் தமிழ்மொழி-யிலான இணையத்தளங்கள் மற்றும் வலைப் பூக்கள் பெரும் எண்ணிக்கையில் பல்கிப் பெருகி விட்டிருக்கின்றன. அதற்கான முக்கிய காரணமாக இலவசமாகக் கிடைக்கும் வலைப்பூக்களான blogspot.com மற்றும் wordpress.com என்பவற் றைக் கூறலாம். ஆகவே இலத்திரனியல் திரைக-ளில் தமிழ்மொழியினைப் பாவிப்பதில் இப்போது பிரச்சினையில்லை. ஆயினும் கணினித்தமிழின் அடுத்தகட்ட வளர்ச்சிக்குத் தேவையானவை இன்-னும் ஏராளமாக உள்ளன. அவைபற்றியும் சிறிது பார்க்கலாம்.

சொற்பிழைதிருத்தி

தமிழ்மொழியில் ஏராளமான இணையத்தள ங்கள் இருப்பினும், அவற்றில் ஏராளமான எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன. தமிழ்மொழிக் கென்று சில எழுத்துப்பிழைதிருத்திகள் உருவாக் கப்பட்டிருப்பினும் அவற்றின் வினைத்திறனானது மிகவும் குறைவானதாகவே உள்ளது. அத்துடன் அவற்றின் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்ட அள-விலேயே காணப்படுகின்றது.

சந்திப்பிழைதிருத்தி இலக்கணப்பிழைதிருத்தி

தமிழ்மொழியில் இருசொற்கள் அடுத்தடுத்து வரும்போது, முதற்சொல்லின் இறுதியெழுத்தை யும், அடுத்தசொல்லின் முதலெழுத்தையும் பொறு த்து அச்சொற்களுக்கிடைய சில மாற்றங்கள் அமையும். எடுத்துக்காட்டாக "அவனை கண்டேன்" என்கின்ற இருசொற்கள் வரும்போது "அவனைக் கண்டேன்" என்றே அமையும். இப்பிழையினை சொற்பிழைதிருத்தியினூடாகக் கண்டறிய முடியாது.

இலக்கணப்பிழைதிருத்தி

தமிழ்மொழியில் உள்ள உரைகளில் (text) காணப்படும் இலக்கணப்பிழைகளைத் திருத்துவத ற்கும் போதிய வினைத்திறன் உள்ள இலக்கணப் பிழைதிருத்திகள் இன்னமும் உருவாக்கப்பட-வில்லை என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது.

தமிழ்மொழியில் செய்யுள் இலக்கணத்தினைச் சரிபார்ப்பதற்காக ஒரு இணையத்தளம் உருவாக் கப்பட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அதில் ஒரு செய்யுளினை உள்ளிட்டால், அதனை ஆரா ய்ந்து அலகிட்டு எழுத்து, அசை, சீர், தளை, அடி போன்ற செய்யுள் உறுப்புகளின் விபரங்களைத் தருகிறது. http://www.avalokitam.com

இயந்திர மொழிபெயர்ப்பு

கணினியே பிறமொழிகளிலுள்ளவற்றைத் தமிழ்மொழியிலும், தமிழ்மொழியில் உள்ளவற்றைப் பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கக்கூடியதாக இருத்தல் இயந்திர மொழிபெயர்ப்பாகும். இவ்வியந்திர மொழிபெயர்ப்பினைக் (Machine translation) கூகிள், முகநூல் போன்ற பெருவணிக சமூக-வலைத்தளங்களில் காணலாம். ஆயினும் இவை இன்னமும் போதிய வினைத்திறனை அடையவில்லை. அதற்கு சாதாரண பயனர்களாக நாங்களும் பங்களிப்புச் செய்யலாம். கூகிளின் இயந்திரமொழிபெயர்ப்பியின் தற்கற்றலுக்குத் (machine's self-learning) தன்னார்வலர்களாகப் பங்களிக்க விரும்புவர்கள் பின்வரும் இணையமுகவரியூடாக அதனைச் செய்யலாம்

https://translate.google.com/community

தேடல் இயந்திரம்

இப்போது தமிழ்மொழியில் தட்டச்சுச்செய்து இணையத்தில் தேடக்கூடியதும் இலகுவாக உள்ளது. ஆயினும் தமிழ் மொழிக்கேயுரிய தேடல் இயந்திரங்களும் உருவாக்கப்பட வேண்டும். அதாவது தமிழிலுள்ள ஒரு சொல்லைத் தேடும் போது, அச்சொல்லிற்கு ஒத்த சொற்களையுடைய விபரங்களையும் அத்தேடற்பொறி தேடித் தரக்கூடியதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக 'அம்மா' என்கின்ற சொல்லைத் தேடும் போது, அத்தேடற்பொறியானது அம்மா, அன்னை, தாய், மாதா போன்ற ஒத்தசொற்களுக்குரிய விடயங்களையும் தேடித் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.

எழுத்துணரி (OCR - Optical Character Recognition)

தமிழ்மொழியில் அச்சிடப்பட்டிருப்பவற்றை மின்வருடல் (scan) மூலம் உரையாக (text) மாற்றத்தக்க செயலிகள் இப்போது உருவாக்கப்பட்டிருப்பினும் அவற்றினது வினைத்திறன்களும் இன்னமும் மேம்படுத்தப்படவேண்டியவையாகவே இருக்கின்றன. வினைத்திறன் மிக்கதாக இவை உருவாக்கப்படின், தமிழ்மொழியில் இதுவரைகாலமும் அச்சுப்பிரதிகளாய் வெளியானவற்றை கணினிமயப்படுத்தி அவற்றில் தேடல்களை மேற்கொள்வது மிக இலகுவாகி-விடும்

நிரல் அல்லது நிரலாக்கமொழி (program or programming language)

இற்றைவரையிலும் தமிழ்மொழிக்கான செயலிகள் அனைத்துமே அனேகமாக ஆங்கிலமொழி மூலமான நிரலாக்கமொழிகளிலேயே எழுதப்படுகின்றன. அவற்றின் பயனர் இடைமுகமே (user interface) தமிழ்மொழியில் அமைந்திருக்கின்றது. எனவே தமிழ்மொழிக்கென்று ஒரு செயலியை உருவாக்க விழைபவருக்கு ஆங்கிலமொழியும் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டியிருக்கிறது. தமிழ்மொழி மட்டுமே அறிந்த ஒருவருக்கு இது எளிதானதன்று. இப்போது தமிழ்மொழியிலேயே நிரல்கள் எழுதக்கூடியவா-றாக 'எழில்' என்கின்ற தமிழ்மொழி மூலமான நிரலாக்க-மொழியொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதனதோ அல்லது அதுபோன்றவற்றினதோ பயன்பாடுகள் அதிகரிக்கப்பட்டுப் பரவலாக்கப்படவேண்டும்.

குரலுணரி (voice recognition)

தமிழ்மொழியில் உரையாடுவதையோ பேசுவதையோ தமிழ்மொழியில் உரையாக (text) மாற்றக்கூடிய செயலிகளும் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறே தமிழ்மொழியில் உரையாக உள்ளவற்றை வாசித்துக்காட்டத்தக்க செயலிகளும் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறான சில செயலிகள் பல்கலைக்கழக ஆராய்ச்சிமாணவர்கள் சிலரால் ஆராய்ச்சி அளவில் உருவாக்கப்பட்டிருப்பினும் சாதாரண பயனர்களுக்கும் பயன்தரத்தக்கதாக இன்னமும் அவை வெளிவிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை மட்டுமன்றி இன்னமும் பல துறைகளிலும் கணினித்தமிழானது தன் கால்களைப்பதித்து வளரவேண்டியிருக்கிறது. அதன் வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டியது தமிழ்ப் புலமையாளர்களின் தலையாய கடமையாகும். தமிழ்மொழி தொடர்பான பல்வேறு விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால் கணினித்தமிழ் தொடர்பான கருத்தரங்குகளோ விழாக்களோ நடைபெறுவது வெகு அரிது. கணினிப் புலமை இல்லாவிட்டாலும் தமிழ்ப் புலமையாளர்கள் கணினித்தமிழின் வளர்ச்சிக்குத் தேவையானவற்றையும் ஆராய்ந்து அவற்றைக் கணினிப் புலமையாளர்களின உதவியுடன் பயன்பாட்டிற்கும் கொண்டுவரலாம்.



உழவுத் தொழிலின் உன்னதம்



லீலா சிவானந்தன்

வேள் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்த வேளாண்மை என்னும் சொல் பொதுவாகக் கொடை, ஈகை ஆகியவற்றைக் குறிக்கும். வேளாண் என்னும் சொல் நீரை ஆள்பவன் என்னும் பொருளாகும். வேளாண்மை என்பது விருப்பத்துடன் பிறரைப் பேணுதல் என்னும் பொருளையும் குறிக்கும்.

விவசாயம், கமம், வேளாண்மை என்று சொல்லப் படும் உழவுத் தொழில் மக்களுக்கு உயிர் வாழத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு வாழ்வாதாரமான தொழிலாகும். மனிதன் இயற்கை கொடுத்த பொருட்களைக் கொண்டு தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து மக்களுக்கு உணவளிக்கிறான்.

பயிர்களை உற்பத்தி செய்வதன் மூலம் நாகரிகத் துக்கு வித்திட்ட மானிடவியல் வளர்ச்சிக்கு வேளா ண்மை என்று கூறப்படுகின்றது. மக்கள் வாழ்க்கைக்கு ஆதாரமான உணவுப் பொருளை உற்பத்தி செய்வதால் உழவுத் தொழில் எல்லாவற்றிலும் மேலானதான உன்னதமான தொழிலாகப் போற்றப்படுகின்றது.

ஷஷசுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை.''

என்பார் வள்ளுவர். உழவுத் தொழில் செய்வதற் குக் கடுமையான உழைப்புத் தேவை. உழவர்கள் அனைவரும் கடுமையான உழைப்பாளிகளே. நிலத்தை உழுது பண்படுத்த வேண்டும். நீரைத் தேக்கி வைக்க வேண்டும். மண்ணுக்கு உரம் போட வேண்டும், களை எடுக்க வேண்டும். நாற்று நட வேண்டும். நீர்ப்பாச்ச வேண்டும். பயிர் வளர்ந்த பின் அறுவடை செய்ய வேண்டும். போர் அடிக்க வேண்டும். இத்தகைய வேலைகளுக்கு கடுமையான உடல் உழைப்புத் தேவை. ஆகவே தான் வள்ளுவர் உழந்தும் உழவே என்று குறிப்பிட்டுக் கூறுகின்றார். தற்காலத்தில் இயந்திரங்கள் வந்தாலும், உடல் உழைப்பும் தேவை என்பது கண்கூடு.

என்னதான் மக்கள் பல தொழில்களைச் செய்தா லும், ஏர்த் தொழிலில் தான் தங்கியிருக்க வேண்டும். ஆகவே உழவுத் தொழில் செய்வதில் எத்தனை துன்பம் இருந்தாலும் உழவுத் தொழிலே எல்லாத் தொழில்க ளிலும் சிறந்தது. உழவுத் தொழில் செய்யாமல் ஏனைய தொழில்கள் செய்பவரையும் தாங்கி, அவர்களுக்கு உணவளித்துக் காப்பாற்றுவதால் உழவுத் தொழில் செய்வோர் உலகத்தவர்க்கு அச்சாணி போல் விளங்கு கின்றனர் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

"சீர்மங்கலம் பொழியும் தெண்டிரை நீர்க்கடல் புடைசூழ்

பார்மங்கலம் பொழியும் பல்லுயிரும் செழித்தோங்கும்

கார்மங்கலம் பொழியும் பருவத்தே தாராளர்

ஏர்மங்கலம் பொழியும் வினிதுழ நாட்கொண்டிடினே''

என்று கம்பர் தனது ஏரெழுபது என்ற நூலில் வேளாண்மை பற்றிக் கூறும் போது உழவுக்கு இனிய நாள் கோடலின் சிறப்புப் பற்றிக் கூறுவார்.

நீர்விழாக்கொள வளர்ந்த நிலமெலாம் தம்முடைய

சீர்விழாக்கொள விளக்குள் திருவிழா பெருக்காளர்

ஏர்விழாக் கொறினன்றி யெறுங்கரிதோ மாப்படையான்

போர்விழாக் கௌமாட்டார் போர் வேந்தரானாரே.

சங்கத் தமிழர் காலத்தில் உழவுத் தொழில் அதன் சிறப்பை எட்டியிருந்தது எனலாம். சமூகத்தின் தலை யாய தேவையாக உழவு சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனா லேயே உழவரை சமூகப்படி முறையில் முதலில் வைத்துப் பண்டைய இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைப் பாகுபாட்டில் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமாகும். இந் நிலப் பகுதியில் உழவுத் தொழிலுடன் கூடிய சிறந்த நாகரிகம், பண்பாடு இருந்தது என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகி- றோம்.

"யாயாகியரே முழவு முதலாட்டி

பயறுபோலிணர பைந்தாது படீஇயர்

உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக

காஞ்சி ஊரன் கொடுமை

சுரந்தனளாகலினானிய வருமோ''

என்பது குறுந்தொகையில் உள்ள ஒரு பாடல். உழவர்கள் தங்கள் மேல் பூந்தாது படிய காஞ்சி மரக் கிளையை வளைப்பதும் ஒற்றை ஏருடைய உழவன் ஈரம் உண்டாக நிலத்தில் விதைக்க விரைவதுமாகிய மருத நிலப் பண்பாட்டை வர்ணிக்கும் பாடல்களாகக் காணப்படுகின்றன.

மருத நிலத்தில் வாழ்ந்தோர் உழவுத் தொழில் புரிந்தனர். மருதநிலத் தலைவர்கள் வேந்தன், மகிழ்னன், ஊரன், கிழவன் என்றும் வேளாண்மை செய்ததனால் வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். நாற்கவிராசநம்பியின் அகப்பொருள் விளக்கத்தில் இருவகை மருதநில மக்களைப் பற்றி எழுதியுள்ளார். உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் மற்றும் ஊரான், மகிழன் போன்ற ஒருசில பெயர்களில் மருத நில மக்கள் அழைக்கப்பட்டமை இலக்கியங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருதநிலப் பறவைகள் நாரை, குருகு தாரா, அன்றில் மற்றும் விலங்குகள் எருமை, நீர்நாய் மரங்கள் காஞ்சி, மருதம் ஆகியன இங்குள்ள மக்கள் களைகட்டல், நெல்லரித்தல், கடாவிடல் ஆகிய தொழில்கள் செய்தனர். பொய்கை, ஆறு போன்ற நீர்நிலைகள் இங்குள்ளதால் மருத நிலத்தில் உழவுத் தொழில் வளர்ச்சிகண்டது.

இவ்வாறு வளர்ச்சி கண்ட உழவுத் தொழில் பற்றி இலக்கியங்களும் சிறப்பித்துக் கூறும்.

திருக்குறளில் உழவு என்னும் ஒரு அதிகாரமே உண்டு. அது வேளாண்மை பற்றியும், உழவுத் தொழிலின் சிறப்புப் பற்றியும் கூறுகின்றது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.
பல்குடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழலவர்.

சொல்வளம் உடைய தண்ணறி பொருந்திய உழவர் பல அரசின் குடை நிழல்களையும் தம் குடையின் கீழ்க் காண வல்வர் ஆவர் என்பது இதன் பொருளாகும்.

இன்னோரிடத்தில் சிலரைக் கண்டால், நிலமகள் சிரிப்பாள் என்று திருவள்ளுவர் கூறுவர். எப்போது சிரிப்பாள் என்றால், எம்மிடம் ஒரு பொருளும் இல்லையே என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவனைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள் என்று கூறுகிறார்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

எல்லாக் காலத்திலும் சிறப்புற்று விளங்குவதும், எல்லாவற்றுக்கும் ஆதாரமானதும் உழவுத் தொழில் ஒன்றுதான்.

கார்கட் தரும்படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில் புகழ்சார் இயல் இசை நாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறம் நடக்கும் திருவளத்தின் செயல் நடக்கும்.
பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே

என்று கம்பர் தனது ஏரெழுபது நூலில் கூறுவார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவரேயன்றித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலுமது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்தே பிறந்தோர்க்கே

இராமாயணம் தந்த கம்பர் எழுதிய ஏரெழுபது என்ற நூல் வேளாண்மை பற்றிச் சிறப்பித்துக் கூறும் முதல் நூலாகக் கருதப்படுகின்றது.

அரசர்களுக்கு ஆலோசனை கூற அவர்களை வழிநடத்த அமைச்சர்களை விட அரசவைப் புலவர்கள் பெரும் பங்கு வகித்தனர். முக்கியமாக எளிய மக்கள் துன்புறும் போது, மழை பொய்க்கும் போது, பயிர்ச் செய்கை நலிந்து போகும் போது மக்கள் நலன் தவிர்க்கப்படும் போது புலவர்கள் அவர்களுக்கு அறிவுரை சொல்லி வழி நடத்துவர்.

வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனைச் சந்திக்கும் போது அவனது நாட்டு வளத்தையும், ஆற்றலையும் பாராட்டிக் கூறி விட்டு சில அறிவுரைகள் கூறினார். “சூரியனை மறைத்துக் கொண்டு வானத்தின் நடுவே மேகம் நிற்பதைப் போல வான்முண்ட நிற்கும் உனது வெண்குடை வெயிலின் வெம்மையிலிருந்து பாதுகாக்க ஏற்பட்டது என்று நினைக்கிறாய். ஆனால் அவை வருந்தும் குடிமக்களைப் பாதுகாக்க அமைத்ததேயாகும். போர்க்காலத்தில் உனது படைகள் அடைகின்ற வெற்றி ஆரவாரம் உழவர்கள் உழுவதன் மூலம் கிடைக்கும் நெல்லின் பயன் என்று அறிவாயாக. பயிர்த்தொழில் செய்யும் உழவர்களைப் பாதுகாத்து ஆட்சி செய்வாயாயின் உன் பகைவர்களும் உன் திருவடி போற்றி நிற்பர்.


- ஞாயிறு சுமந்த கோடு திரள்கொள்
முகமாக விசும்பின் நடுவின் நின்றாங்கு
கண்பொர விளங்குநின் விண்பொருவியன்கொடை
வெயில்மறைக் கொண்டன்றோ? அன்றே, வருந்திய
குடி மறைப்பதுவே....
- பொருபடை தருஉம் கொற்றமும் உம்படை
ஊன்றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பதும் வாரி குன்றினும் ....
- பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி
குடிபுறம் தருகுவை ஆயின் நின்
அடிபுறம் தருகுவர் அடங்காதோரே.

இவ்வாறு பல இலக்கியங்களும் உழவுத் தொழிலின் சிறப்புப் பற்றிக் கூறும். நீரின் அவசியத்தையும், அதன் பயன்களையும் நீர் சம்பந்தமாக, பயிர்ச்செய்கை சம்பந்தமாக அரசன் ஆற்ற வேண்டிய கடமைகளையும் கூறும் பாடல்கள் நிறையவே கூறப்படுகின்றன.

நீர் மேலாண்மை பற்றியும், மண்ணின் வகை பற்றியும் அவர்கள் நிறையவே அறிந்திருந்தார்கள். எந்த மண்ணில் எப்பயிர் செய்ய முடியும் என்பதை அறிந்திருந்தனர். குறிப்பிட்ட பகுதிக்குப் பொருத்தமான நீர்ப்பாசன முறைகளைக் கடைப்பிடித்து வைத்தனர். மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தில் அருவி நீர் மூலம் தினை விதைத்தார்கள்.

அதேவேளை உழவு, உழுதல் பற்றி உழவர்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள். உழுதல் என்பது கீழே உள்ள மண்ணை மேலே கொண்டு வருவதும், அதன் கடினத்தன்மையை நீக்கி மென்மையாக்குதலும் ஆகும். இதனால் மண்ணானது தாவரத்தின் வேர் சுவாசிக்கத் தேவையான காற்றை அளிக்கிறது. ஈரப்பதத்தை நீண்ட காலத்துக்கு நிலைக்கச் செய்கிறது. வளமான மண்ணை மேலே கொண்டு வரச் செய்கிறது.

இக்காலத்தில் விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் தொகை குறைந்து கொண்டு வருகிறது. விவசாயத்தில் மக்கள் அதிகம் ஈடுபட வேண்டும். பாரம்பரியம் காப்பாற்றப்பட வேண்டும்.



Thank You!

FLATO
DEVELOPMENTS INC.

என்றுமுள்ள தென் தமிழ்



முனைவர பால சிவகடாட்சம்

பேச்சு வழக்கில் இருந்துவரும் ஒரு மொழியின் இலக்கியத்தில் மட்டுமல்ல, இலக்கணத்தில் கூட மாற்றம் ஏற்பட இடமுண்டு. இந்த மாற்றங்களை ஏற்காது பழையதையே கட்டிப்பிடித்து நிற்போருக்கு இறுதியில் தோல்வியே எற்படுகின்றது. இதனை நன்னூல் என்னும் இலக்கண நூலாசிரியர் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே
- நன்னூல் 462

பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள்மட்டுமே மாற்றம் அதிகம் இன்றி ஏட்டில் மட்டும் நிலைத்திருக்க முடியும். அவற்றை இறந்துபோன மொழிகளாகச் சிலர் குறிப்பிடும் வழக்கமும் உண்டு. இலத்தீனும் சமஸ்கிருதமும் இந்தப் பேசாமொழிகளுள் அடங்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக உலகில் வாழும் ஒரு மக்கட் கூட்டத்தின் அன்றாடத் தொடர்பு மொழியாக, பேச்சுமொழியாக வாழ்ந்துவரும் மொழி தமிழ் மொழி. காலம் தோறும் அது மாறிவந்துள்ளது. அந்நிய மொழிகலைப் பேசுவோரின் தொடர்புகள் காலம் தோறும் ஏற்படும்போதெல்லாம் தமிழ்மொழியானது பேச்சு வழக்கிலும் எழுத்து நடையிலும் மாறிக்கொண்டு வந்துள்ளது.

சங்ககாலத்தில் பேசப்பட்ட தமிழ் எப்படி இருந்தது என்பதை நாம் அறியோம். எனினும் அக்காலப்பகுதியில் ஏட்டில் எழுதப்பெற்ற இலக்கியங்கள் இன்றும் எமக்குக் கிடைக்கின்றன. ஆனால் அவற்றைச் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரால்கூடப் படித்தறிந்து கொள்வது கடினம். இந்த நூல்கள் எழுதப் பெற்றுப் பல நூறு ஆண்டுகள் கழித்துத் தூரநோக்கு உடைய தமிழறிஞர்கள் சிலர் தமக்குக்கிடைத்த நூல்களுக்குத் தமது சமகாலத் தமிழில் உரை எழுதிவைத்தனர். இவர்கள் எழுதிவைத்த உரைகளின் உதவியுடனேயே பழந்தமிழ் நூல்களை இன்றைய தமிழ்ப் பண்டிதர்களும் படித்து விளங்கிக்கொள்ள முற்படுகின்றனர். இத்தகைய உரையாசிரியர்கள் வாழ்ந்து ஐஞ்ஞூறு அறுநூறு ஆண்டுகழிந்த இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அந்த உரையாசிரியர்களின் உரைகளைத்தானும் இன்றைய தமிழ் பேசுவோரால் விளங்கிக் கொள்ளமுடியாது. காலம் மாறிவிட்டது. காலத்துக்கேற்ப தமிழும் மாறிவிட்டது.

பழந்தமிழில் முன்னையோர் பாடிவைத்ததைத் தம் சமகாலத்துத் தமிழுக்கு இசைவாக்கம் செய்து தந்த தமிழறிஞர்களின் பெரு முயற்சியால்தான் தமிழ் இன்றும் தன் இளமைத்திறன் குன்றாது அழகுடன் திகழ்கின்றது.

“ஒவ்வொருவரிடமும் ஏதோ ஒரு திறமை உண்டு என்று உணர்பவர்கள் எதனையும் தாம் மட்டுமே செய்யமுடியும் என்று வல்லமை பேசமாட்டார்கள்” என்னும் பொருள் தரும் பாடல் ஒன்றை இற்றைக்கு ஆயிரத்து நாநூறு ஆண்டுகளுக்கு முன்னர் காரியாசான் என்பவர் எழுதி வைத்தசிறுபஞ்சமூலம் என்னும் நூலில் காணமுடியும்.

வான் குரீஇக் கூடு அரக்கு வால் உலண்டு நூல் புழுக்கோல்
தேன் புரிந்தது யார்க்கும் செயல் ஆகா - தாம் புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னார் ஒரோ ஒருவர்க்கு
ஒல்காது ஒரொன்று படும்.
- சிறுபஞ்ச மூலம் 25

இந்தப்பாடலைப் படித்த பிற்கால ஔவையார், “பாடல் அருமையாக இருக்கின்றது. ஆனால் இந்தக் காலத்தவர்க்கு இந்தப் பழம் தமிழ்ப்பாடல் எப்படிப் புரியும். இந்தக்காலத்துக் தமிழில் இதனைப்பாடிவைப் போம்” என்று தமது சமகாலத்தமிழில் அதாவது ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிப் பாடிவைத்தார்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது.
- ஔவையார்

சிறுபஞ்சமூலத்தில் சொல்லப்பட்டதை மட்டுமல்ல அதை இலகுபடுத்தி ஔவை சொன்னதையும்கூட இன்று எல்லோராலும் விளங்கிக்கொள்ளமுடியாது.

“தூக்கணாங் குருவியின் கூடு, அரக்குப் பூச்சிகள் ஆக்கும் கொம்பரக்கு என்னும் மெழுகு, காட்டு வெளியில் கறையான் எழுப்பிய புற்று, தேனீக்கள் காட்டிய அறுகோண அறைகள் கொண்ட தேன்கூடு, சிலந்தி பின்னிய சிக்கலான வலை. இவற்றுள் ஒன்றைக்கூட வேறு யாராகினும் ஒருவர் செய்துகாட்ட முடியுமா? எதையும் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் பெற்றவன் நான்தான் என்று எடுத்ததற்கெல்லாம் வீரம் பேசாதீர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ ஒரு கெட்டித்தனம் இருக்கத்தான் செய்யும்ஜி

என்று இன்றைய தமிழில் கூறினால்தான் இன்றுள்ள தமிழரால் விளங்கிக் கொள்ள முடியும். காலம் தோறும் தமிழும் மாறுகின்றது என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

சங்கத்தமிழ் தந்த கருத்துக்களை நம் சமகாலத் தமிழில் தர முயன்ற கவிஞர்களுள் கண்ணதாசன் ஒருவர்.

நான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்

தான் நோக்கி மெல்ல நகும்

என்னும் வள்ளுவரின் குறளை எல்லோராலும் விளங்கிக் கொள்ளமுடியமா? அதையே

உன்னை நான் பார்க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே

விண்ணை நான் பார்க்கும்போது என்னை நீ பார்க்கின்றாயே.

நேரிலே பார்த்தால் என்ன நிலவென்ன தேய்ந்தா போகும்

என்று கண்ணதாசன் பாடும்போதுதான் எல்லோருக்கும் விளங்குகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற ஒரு காட்சி.

காண்போர் உள்ளத்தைத் தன் கண்கவர் அழகினால் கலங்கவைக்கும் அந்த இளம்பெண் எங்கோ போகவேண்டி வீட்டிலிருந்து வெளிக்கிளம்பி வீதியில் இறங்குகின்றாள். அவளது அழகைக் கண்டு வியந்த புலவர் அவளிடம் ஏதோ சொல்ல வருகின்றார்.

நல்லாய் கேள்

ஆய் தூவி அனம் என, அணி மயில் பெடை எனத்

தூது உண் அம்புறவு எனத் துதைந்த நின் எழில் நலம்

மாதர் கொள் மான் நோக்கின் மடநல்லாய் - நின் கண்டார்ப்

பேதுறூ உம் என்பதை அறிதியோ அறியாயோ

நல்லவளே கேட்டுக்கொள்.

அன்னச் சிறகு போல், அழகுப் பெண்மயில் போல், குறுணிக் கல் உண்ணும் பெண்புறாப் போல் மென்மையும், அழகிய மானின் மருட்பார்வையும் கொண்ட உன் அழகு காண்பவர் மனத்தைப் பேதலிக்க வைக்கும் என்பதை நீ அறிவாயோ? அறியமாட்டாயோ?

முதிர் கோங்கின் முகை என முகம் செய்த குரும்பை எனப்

பெயல் துளி முகிழ் எனப் பெருத்த நின் இளமுலை

மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நின் கண்டார்

உயிர் வாங்கும் என்பதை உணர்தியோ உணராயோ

முள்ளிலவ மரத்தின் மொட்டு என, முகம் வைத்த குரும்பை என, மழைத்துளி விழுந்த அரும்பு எனக் காட்சிதரும் உன் இளம் முலையும் உரோமம் படிந்திருக்கும் அழகிய உன் முன் கையும் காண்போரின் உயிரை வாங்கும் என்பதை உணர்வாயோ? உணரமாட்டாயோ?

“நீயும் தவறு இலை நின்னைப்புறங்கடைப்

போதரவிட்ட நுமரும் தவறு இலர்

நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்

பறையறைந்து அல்லது செல்லற்க என்னா

இறையே தவறு உடையான்”

- கலித்தொகை 56 குறிஞ்சிக் கலி 20

“தவறு உன்னிடத்தில் இல்லை. உன்னை வெளியே செல்ல அனுமதித்த உன்னுடைய உறவுகளிலும் தவறு இல்லை. பார்ப்பவர்களின் மனதில் கலக்கத்தை ஏற்படுத்தும் தனது போர் யானை ஆற்றில் நீராடப் போவதற்காக வெளியே வீதியில் இறங்கிவிட்டது என்பதை அவ்வூர் மக்களுக்குப் பறையறிந்து அறிவிக்கும் மன்னன், நீ வெளியே வருவது பற்றி அறிவிக்காமல் விட்டது அவனது தவறு” என்கிறார் இந்தப் புலவர்.

சங்ககாலப் புலவரின் அழகிய இந்தப்பாடல் உள்ளடக்கிய கருத்தை இன்றைய தமிழில் ஒரு திரைப்படப்பாடல் மூலம் தர முயன்றார் கவிஞர் கண்ணதாசன்.

“கண் படுமே பிறர் கண் படுமே நீ வெளியே வரலாமா உன்

கட்டழகான மேனியை ஊரார் கண்ணுக்குத் தரலாமா

ஆடவர் எதிரே செல்லாதே அம்பெனும் விழியால் கொல்லாதே



மங்கை உன் அழகை மாதர் கண்டாலும் மயங்கிடுவார் கொஞ்ச நேரம்

இந்த மானிடர் உலகில் வாழ்கிறவரைக்கும் தனியே வருவது பாவம்”

நம் தமிழ்மொழி மாறிவிட்டது. இன்றும் மாறிக்கொண்டே வருகின்றது. எவராலும் இந்த மாற்றத்தைத் தடுத்தி நிறுத்திவிட முடியாது. காலத்தை ஒட்டி மாறாது நின்றுவிட்டால் தமிழும் ஒரு செம்மொழி என்ற அங்கீகாரத்துடன் ஏட்டு மொழியாக மட்டும் வாசிக்கப்படும் நிலை உருவாகும்.

ANCIENT TAMIL POEMS





வான் குரீஇக் கூடு அரக்கு வால் உலண்டு நூல் புழுக்கோல்
தேன் புரிந்தது யார்க்கும் செயல் ஆகா - தாம் புரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னார் ஓரோ ஒருவர்க்கு
ஒல்காது ஓரொன்று படும்.

- சிறுபஞ்ச மூலம் 25

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது.

- ஒளவையார்

ÚCould anyone build a nest like the one built by the weaver bird? Could anyone make silk akin to that made by the silkworm? Could anyone erect a structure like that of a termite mount? Who else could construct a honey comb other than the honey bees? Who could create something like the lac produced by lac insect on tree branches? Could anyone think of making a web like the one designed and built by a spider? Never extol yourself saying you are the one who could do any job. Everyone is capable of doing something which others may find difficult."

[Translation of a poem written in old Tamil by Kariyaasaan in sixth century and later adapted by Auvaiyaar.]

நல்லாய் கேள்
ஆய் தூவி அனம் என, அணி மயில் பெடை எனத்
தூது உண் அம்புறவு எனத் துதைந்த நின் எழில் நலம்
மாதர் கொள் மான் நோக்கின் மடநல்லாய் - நின் கண்டார்ப்
பேதுறூ உம் என்பதை அறிதியோ அறியாயோ
"நீயும் தவறு இலை நின்னைப்புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறு இலர்
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந்து அல்லது செல்லற்க என்னா
இறையே தவறு உடையான்"

- கலித்தொகை 56 குறிஞ்சிக் கலி 20

She is very beautiful. So beautiful that anyone who sees her loses his mind. She seems to be ignorant of the pain she is causing to those who are exposed to her incredible beauty. Yet no one has the right to place her under house-arrest. Whose fault is then that this girl coming out from her house disturbing the minds of those who see her? The poet talks directly to her

"Good lady! Please listen.

Are you aware or not of the fact that your beauty could kill someone? Are you aware or not of the pain your incredible beauty could cause to those innocent men who see

you? You are out in the open but insensitive to anything happening around you.

However,

"You are not to be blamed. Neither your relatives.

The king who warns the public when his terrifying killer elephant is

out on the street on its way to the river

has failed to caution the people about your outing.

It is his fault."

[The Tamil poet of the Sangam era wants to us to imagine the boundless beauty of a young girl with the help of this elegant poem.]



திருக்குறள் - Thirukkural

ThiruKkural Dradition Displayed by the Students of Thamil Poonka

Tamil language is enshrined with many ancient literatures that exhibit the traditional values of Tamil people. Tamil language has been accepted as one of the classical languages of the world because of its age, finesse and sweetness.

The many ancient literatures of the Tamil language are also the reason for Tamil to be classified as a classical language. One of those ancient literatures is Thirukkural.

ThiruKkural

Thiruvalluvar wrote Thirukural 2000 years ago. Research by Indian experts and poets have established Thiruvalluvar was born 31 years before Jesus Christ.

Thirukkural describes the Art of Living. This book contains almost all materials to that extent it can be said there is nothing that has not been included in this book. That is why this book is translated in many languages.

Thirukkural contains 1,330 verses known as Kurals. Each kural has two lines of seven words. Thirukkural is divided into 133 chapters and each chapter contains 10 verses.

Thirukkural illustrates fostering nature and living according to nature enhances happy living. As the Pongal festival is celebrated to thank nature, we discuss about agriculture and the Kurals that describe agriculture.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

After trying other jobs the world comes to the plough which though hard is best.

For agriculture to be effective, water - rain- is essential. The following Kural describes this.

உழவுத் தொழில் சிறப்பாக அமைய மழையின் தேவை அதாவது நீரின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. இதைப் பின்வரும் குறள் எடுத்துரைக்கிறது.

துப்பார்க்குத் துப்பாய துப்பாகி, துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (12)

To the hungry, rain supplies both food and itself as drink.

Productive wealth must be shared with others to enhance life is described in the following Kural.

வளம்நிறைந்த செல்வம் இருந்தால் அதை மற்றவர்களுடனும் பகிர்ந்து வாழ்வதே சிறந்த வாழ்வு என்றும் திருக்குறள் கூறுகின்றது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (322)

Share the food and serve all lives, This is the law of all the laws.

As nature is the basis for agriculture that not only help the farmers to survive but also help all others to survive, the Pongal festival is celebrated as thanks giving to the nature. That is why in Canada we celebrate the month of October as thanks giving month.

இவ்வாறு தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க உதவும் உழவுத்தொழிலுக்கு ஆதார மான இயற்கைக்கு நன்றி கூறுவதாகவே இந்தப் பொங்கல்விழா அமைகிறது. அதனாற் தான் கனடாவிலும் ஒக்ரோபர் மாதத்தை நன்றி கூறும் மாதமாகக் கடைப்பிடிக்கிறோம்.

பிணியின்மை, செல்வம், விளைவு இன்பம், ஏமம்,
அணியென்ப நாட்டிற்கிவ் ஐந்து. (738)

Health, wealth, fertility, joy, and safety are called a land's five ornaments .

We all know that the five basic tenets described in Thirukkural also applicable to Canada. As we celebrate the 150th anniversary of Canada we will also accept these tenets.

திருக்குறள் கூறும் அந்த ஐந்து அம்சங்களும் கனடாவிற்கும் ஏற்புடையதாக உள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அதனைக் கனடாவின் 150 ஆண்டுப் பிறந்த நாளைக் கொண்டாடும் நாமும் இப்பொங்கல் விழாவில் ஏற்றுக்கொள்வோம்.

நன்றி. வணக்கம்.

விழுதாய் நாமும் மாறிடுவோம்!

நூற்றி ஐம்பது அகவையிலே
நுழையும் கனடா தேசத்தைப்
போற்றிப் பணிந்து வணங்கிடுவோம்!
பொலிவுற வேண்டி வாழ்த்திடுவோம்!!

ஒளிந்து கிடக்கும் திறமைகளை
ஒன்றாய்த் திரட்டி மூச்சோடு
வெளியே கொணர்ந்து கனடாவின்
விழுதாய் நாமும் மாறிடுவோம்!

- அருள்மணி

You Tamil?

Tharani Ketheeswaran

You are someone who may or may not identify yourself as Tamil. You may call your parents, "Amma" and "Appa". You may watch Vijay's movies and like to wear sarees or a vetti. You may enjoy your mom's mutton curry and I bet this is as Tamil as you may get.

So, what? You say.

Just out of curiosity... Is that all there is to being a Tamil? I'm not saying you are not being Tamil enough. In fact, I am going to admit that I am just like you. Yes, I love to wear sarees, eat Tamil food and watch Tamil movies. These are some of the things we as Tamils enjoy and use to identify ourselves as Tamils.

But, believe me, you can enjoy your life as a Tamil by knowing more of your language, heritage and culture. I am not trying to preach, but I am telling this from personal experience. In my opinion, the key to enjoying this "Tamil Experience" is to appreciate and enjoy the Tamil language. After learning Tamil from some amazing teachers in high school, I've always had a passion to study Tamil further one day. After completing university and my courses for Certified General Accountant (CGA) certification, I have had a chance to fulfill my wish to continue my Tamil studies. I am currently studying B.A.Tamil, 3rd year at Annamalai Canada Campus. That's when I realized one thing – Tamil is not just about being able to read, write and speak Tamil as I used to think. As I started learning about the Tamil history and different pieces of literature, I came to know more about the richness of Tamil as a language, heritage and culture.

Reading, writing, and being able to speak Tamil is like walking on the beach taking steps into just the shallow water, but only when you go a bit further will you find priceless pearls.

Similarly, only when you start learning Tamil further will you realize that Tamil is such a beautiful language rich in poetry, philosophy, ethics and literature that is quite intriguing. It made me wonder how poetry and philosophy with such deep meaning were created in Tamil almost 3000 years ago without Google, YouTube and Wikipedia! Lucky for us, we do not have to search far and wide to find these pieces of literature, because we now have everything at our fingertips. It's never too early and never too late to live the "Tamil Experience".

5 Fascinating Facts about Tamil

Did you know:

✓ There are 76 million Tamil speaking people in this world

✓ Tamil is one of the few living classical languages. Other classical languages such as Latin, Ancient Greek, Sanskrit and Ancient Chinese are no longer in use. Tamil is more than 2700 years old, able to function independently of other languages and has its own literary traditions. Recently, historians such as Asko Parpola have stated that Tamil was the language of the Indus Valley Civilization. This is a very interesting civilization that flourished over 5000 years old. Check it out in YouTube!

✓ The Tamil language has been quite consistent in its form over the years following the same grammar rules as stated in Tholkapiyam, one of the first grammar books written about 2700 years ago

✓ Thirukural, written by Thiruvalluvar on philosophy, ethics and morals has been translated into about 82 world languages, one of the most widely translated non-religious works in the world

✓ Tamil dynasties built great empires and federations. Notable among these is the Chola Federation. Some call it an empire, but functionally, it was like a Federation. The Chola Federation under Raja Raja Cholan and Rajendra Cholan was the greatest Indian Overseas Empire or Federation ever to exist. Under Rajendra Cholan, it stretched from the East side of present day Indonesia to the bank of the Ganges in what is now North India. Its influence was felt as far West as Europe and as far East as China. The highlight of this Federation was its merchant navy with a well-organized flotilla of over 1000 ships. The Chola merchant navy protected merchant ships that plied the Indian Ocean and South China Sea.

How cool is that?

What next?

Our parents' generation has given us an identity as Tamils. That makes us part of the "Tamil" club. They have immensely contributed to the growth of Tamil language and culture in Canada by spending their time, money and effort taking us to Tamil, music, dance and other classes to keep us connected to our roots. They have done their part successfully.

January is now the Tamil Heritage month

It is commendable that many of us young Tamils can read, write and speak Tamil. It is our turn now to share the joy of living the "Tamil Experience". As Tamils, you and I, together as us, we need to pass the joyful experience of being Tamil to the next generation. How are we going to do this?

How immersed are you in the Tamil language and culture? How much of it will you be able to take forward to the next generation? If we don't take it forward, who will? If not us, then who?

It is my opinion that Tamil will be a major world language in the near future and we will be doing the next generation a favor by passing it along to them …

If you want to learn Tamil beyond the basics, reach out to a Tamil class in your area. Tamil Teachers will be more than happy to teach you. You can also know more about your language, heritage and culture by researching on topics related to Tamil on the internet. You can also take part in festivals such as Pongal and try foods such as Koththu Roti, Masala Dosai, Idly, Pongal and Puttu!

May the joy of being Tamil be yours forever!

தமிழ் பண்பாட்டு மரபியல் மையம்
Centre for Tamil Heritage & Culture

நன்றி

Thanks the following performing arts schools
including the teachers, students and parents who have
supported the 7 th Annual Markham Thai Pongal Vizha
Complimentary advertisements in the follwing pages



மார்க்கம் தைப் பொங்கல் விழா


அபிநயாலயா நாட்டியாலயம்
ABINAYALAYA NATYALAYAM
புதிய வகுப்புகள் ஆரம்பம்
பரதநாட்டிய வகுப்புகளும்,
நடனப்பரீட்சைக்கான
அறிமுறை செய்முறைக்கான
பாடவிதானங்களும்,
பரீட்சைக்கான Credit Course (TDCSB)
பாடவிதானங்களும் கற்பிக்கப்படும்
"ஆடல் கலைமணி" ஸ்ரீமதி றஜனி சக்திரூபன்
Smt. Rajanie Sakthiruban
Call: 416-320-2913 /416-519-1060


Atputha Narthanalayam
Tel.: (416)844-2170
Brimley & Huntingwood (Scarborough)
Salem & Roseland (Ajax)
Mrs. Atputharani Kirubaraj
MA in Dance
BA Honors in Fine Arts
Bharathakalavithaker
Teacher Trainee
I also teach tamil classes, I'm a teacher with Arivakam.


கலைக்கோவில்
Kalaikovil Academy of Fine Arts - Canada
"Miruthanga Kalaavithakar" – "Layakalaa Kulanithi"
Shri. Kugenthiran Kanaganthiram
B. Music (Miruthangam)
Director - Kalaikovil Academy of Fine Arts
Direct (416) 629 - 6307
"Nattuvanga Kalaimani" – "Naatiyakalaa Kulanithi"
Smt. Vanitha Kugenthiran
M. Dance (Bharathanatyam)
Director - Kalaikovil Academy of Fine Arts
Direct (416) 803 - 2425
AUTHORIZED CAMPUSES
Mast. Sakithyan Logabalendran
Teacher - Kalaikovil Academy of Fine Arts
Markham Campus
Smt. Ellini Niranjan
Selvi. Deluchini Sivagnanasuntharam
Selvi. Anusika Mahendran
Mast. Ajey Kirubo
Teacher - Kalaikovil Academy of Fine Arts
Brampton Campus
Selvi. Kirusanthi Kandavel
Selvi. Piraveenaa Kunarajah
Oshawa Campus
Selvi. Abnasha Sivagnanasuntharam
Scarborough Campus
பரதநாட்டியம், மிருதங்கம், புல்லாங்குழல்
ஆகிய பாடங்களுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன
STUDIO LOCATIONS
Head Office
30, New Delhi Drive, Unit-64, Markham, ON L3S 0B9, Canada.
Tel: (416) 292-2425 Toll Free: 1 (877) 513-2425 Fax: (647) 799-1024


NATTIYA KALAKSHETRA
புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் ஆரம்பம்
SCARBOROUGH
(Morningside & Ellesmere)
AJAX
(Salem & Williamson)
MARKHAM
(McCowan & 14th) (Coppard & Quantum)
Smt. Thenujah Thirumaran
(DIPLOMA IN INDIA) "KALAKSHETRA"
905 554 5846
647 638 7004


Sivasakthy Fine Arts Academy
Bharathanatyam & Carnatic Music
• Weekly Classes/Training
• Examination Preparation
• Large Productions
• Performances
• Annual Shows
Bharathanatyam:
Smt. Kawsalya Rajakumar
(Natya Shironmani, Nattuvanga Kalaimani, B.Eng)
Carnatic Music:
Smt. Mathumathy Sivakumaran
("Isai Muthukalaimani", M.A Music, BA, CMA, CPA)
Please Contact For More Info:
Smt. Kawsalya Rajakumar -
(416) 858 - 9593
Smt. Mathumathy Sivakumaran
(416) 301 - 4186
danceforall@gmail.com



Natiya Samarpana
Kalai Koodam
ஒரே இடத்தில் மிகவும் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த
யோகா மற்றும் தமிழ் வகுப்புகள்
ஆரம்பமாக உள்ளன.
We are Accepting New Classes
Bharathanatiyam, Tamil Language, Yoga
Music, Karate, Western dance & Tailoring
416-892-6788
70 Innovator Ave
Whitchurch - Stouffville, ON L4A 0Y2


KALAI ARUVI ACADEMY OF FINE ARTS
கலை அருவி நுண்கலை பயிலகம்
(416) 871-2570
SMT.RENUKA VIGNESWARAN
(GURU,DIRECTOR & CHOREOGRAPHER)
BHARATHANATYA CLASSES(GROUP OR PRIVATE)
GRADE 1-8 PRACTICAL AND THEORY EXAM
BHARATHANATYA ARRANGETRAMS
PREPARATION FOR HIGH SCHOOL CREDITS IN DANCE
CULTURAL AND ANNUAL DANCE PROGRAMS
CALL NOW TO ENROLL:(416)871-2570
MARKHAM/NASHDENE
MEADOWALE/SHEPPARD
DONMILLS/EGLINTON
DURHAM REGION


ஸ்ரீ அபிராமி நாட்டியாலயா
Sri Abiramy Dance Acedemy
Waterloo - Mississauga - Scarborough
South Indian Classical Dance Acedemy
Director - Selvi Sureswaran
Locations:
Birchmount & Sheppard - Scarborough
Mavis - Mississauga
Anndale Road - Kitchener/ Waterloo
Contact Numbers:
416 - 293 - 7753 main
647 - 407 - 1961 cell
Director
Selvi @ sriabiramy.com
Event Coordinator
Suresh @ sriabiramy.com
Web
www. sriabiramy.com


StarzDance Academy
Studio Rentals
Dance Classes
Video Productions
Wedding Choreography
Show/ Event Choreography
Stage/ Event Performances
151 Nashdene Court, #19
Toronto ON
M1V 2T3
647.967.7248
WWW.STARZDA.CA


www.SusiNalliah.com
thaKiDa
Dance Company
Expressions of body, mind, soul
Susi Nalliah
Artistic Director
Bharata Natyam
416.671.2742
susithanalliah@yahoo.com


CAPREIT
Building Communities from Coast to Coast
As one of Canada's largest owners of multi-family rental communities, CAPREIT is committed to providing safe, secure and comfortable accommodation throughout our portfolio of well-managed and attractive apartments, townhomes, and land-lease communities.
caprent.com





2017





AWARDS








YOGA









MARKHAM-2017















மார்க்கம் நிகழ்வுகள்

2016





மழலையர் கோலாட்டம்





WELCOME MINISTOR'S PRESENCE-2016









CLASSICAL DANCE



நன்றி நவில்கிறோம்!
Thanking You!
Merci Beaucoup!

FLATO®
DEVELOPMENTS INC.













AN EXCLUSIVE COLLECTION OF LUXURY SINGLES IN MARKHAM

RIVERWalk MEADOWS

Introducing Riverwalk Meadows, an exclusive collection of luxury singles in the desirable City of Markham, located at Ninth Line and 14th Ave. This highly-sought after area is surrounded by everything a modern family could need; from schools, shops, restaurants, parks, golf courses and more. Riverwalk Meadows truly has it all.

printed@ Glorious Print 905 471 2500

FLATOGROUP.COM

(905) 479-9292